RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20310



# காப்பிய நூல்களில் பெண்களின் அறக்கோட்பாடு

**ஆ. முனியாண்டி** [அ, *]

[அ] மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பல்கலைநகர், மதுரை-625 021, தமிழ்நாடு, இந்தியா.

# Ethics of women in archival literatures

**A. Muniyandi** [a, *]

[a] Madurai Kamaraj University, Madurai- 629165, Tamil Nadu, India.

* Corresponding Author: lotusthulasitamil@gmail.com

Received : 19-01-2020
Accepted : 23-05-2020

**ABSTRACT**

From the earliest times to this period, Tamil literature has been the primary source of literature. Archival literature is unique in the History of Tamil literature. The purpose of this article is to illustrate the ethics of women in these archival literatures. Through this article, we are aware of the fact that women have become the best in the world of morality and the need to promote feminism.

**Keywords:** Arakkotpatu, Penniyam, Thavathin Sirappu

## ஆசிரியர் குறிப்பு



**முனைவர் ஆ. முனியாண்டி**, கண்காணிப்பாளர், பதிவாளர் அலுவலகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருகிறேன். கவிதை, சிறுகதை, மற்றும் பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளேன். பொருநை இலக்கியக்களம், தமிழ்நிலம் அறக்கட்டளை, நாங்கள் அறக்கட்டளை மற்றும் சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதல் இணைந்து என் அருந்தமிழ்ப் பணியினையும் ஆய்வுக் சேவையினையும் பாராட்டி எனக்கு தமிழ் இலக்கிய வித்தகர் விருது வழங்கியுள்ளது.

## முன்னுரை

தனிமனிதனையும், சமுதாயத்தையும் போற்றிப் பாதுகாக்கும் ஒழுக்க நெறியாக அறம் இருக்கிறது எனலாம். தொடக்க காலம் முதல் இக்காலம் வரை அறத்திற்கு முதன்மை கொடுக்கும் இலக்கிய நூல்களாகத் தமிழ் இலக்கிய நூல்கள் திகழ்கின்றன. இந்த தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பிய இலக்கியம் தனித்துவம் பெறுகின்றன. இந்த காப்பிய

இலக்கிய நூல்களில் பெண்கள் குறித்தான அறக்கோட்பாடுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அறம், தவவாழ்வு, துறவறநோன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம் போன்ற உட்தலைப்புகளில் இக்கட்டுரையினைக் காணலாம்.

## அறம் என்பது

1. மனிதன் தனக்குரிய கடமைகளைத் தவறாது செய்வதே அறமாகும். 'அறு என்னும் வினைச் சொல்லின் அடியாகப் பிறந்தது அறம். இதற்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, என்று பலவகைப் பொருளில் வழங்கி வரும் என்பர் (Aiyar, 1916).
2. பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்து எறிவதே அறம் என்று ஆன்மீகம் விளக்குகிறது (Sivagamasundari, 1972).
3. அறம் என்பதற்கு கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி 'குடும்ப வாழ்வும் பெறுவாழ்வும் சீராக இயங்கி ஒருவர் கடைபிடிக்கும் சமயச் சார்பான ஒழுங்கு முறைக் கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகளே அறம் என்பர் (Kathiraver Pillai, 2014).

## தொல்காப்பியர் கூறும் அறம்

பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய மூன்றையும் ஒன்றாக அடைவதற்கு அறத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை தொல்காப்பியர்,

**"இன்பம் பொருளும் அறனுமென்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டங் காணுங்காலை"** (தொல்.பொருள்:நூற்;:23)
**"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய**
**மும்முதற் பொருட்டு முரிய வென்ப"** (தொல்.பொருள்:நூற்:27)

அறத்தின் பண்புகள், ஒழுக்க நெறிமுறைகள் மனிதனை நல்வழிப்படுத்தும் ஓர் ஆயுதம் எனலாம் (Ilampuranar, 1982).

**மாசில்லா சிறந்த அறம்**

மாசில்லாத சிறந்த அறம் எது என்பதை மணிமேகலை புண்ணியராசனிடம்,

**"அறம் எனப்படுவது யாது கேட்பின்**
**மறவாது இதுகேள்; மண் உயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும், உறையும் மல்லது**
**கண்டது இல்"** (மணிமேகலை:12:77-80)

இவ்வாறு உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம், உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவது தான் மாசில்லா சிறந்த அறமாகும் என்பதை இதன் மூலம் நாம் அறியலாம் (Chithalai Saathanar, 1949).

## வேந்தனுக்கு மணிமேகலை கூறும் அறநெறி

மணிமேகலை, இளமையும் யாக்கையும் நம்மைவிட்டு நீங்கிச் செல்லும். இவ்வாழ்வில் பயனடைய வேண்டுமானால் அறவோர் மகிழும் ஈதல், இசைபட வாழ்தல் என்பதற்கு ஏற்ப அறநெறியிலிருந்து ஈதல் வேண்டும் என்று மணிமேகலை வேந்தனிடம் கூறி மக்களுக்குப் பசிப்பிணியைப் போக்குவதை,

**“மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி**
**கந்திற் பாவை கட்டுரை எனலாம்...**
**வாய் ஆகின்றது என வந்துதித்து ஏத்தி**
**ஆய்விளை நல்லாள் தன்னுழைச் சென்று**
**செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ**
**கொங்கு அவழ்குழார் கற்புக்கு முறைப்பட்டே**
**நலதகை நல்லாய் நல்லோடு எல்லாம்”** (மணிமேகலை:12:72-76)

என்கிறாள். ஒரு நாடும் நாட்டு மக்களும் குறைவின்றி வாழ வேண்டுமாயின் பசிப்பிணி இல்லாமலிருக்க வேண்டும். பசிப்பிணியுடன் இருந்தால் நாட்டில் அமைதி கெடும். பசிப்பிப்பிணியைப் போக்க வேந்தனுக்கு அறிவுறுத்தி அறவழிப்படுத்தியது, பெண்மையின் தன்மையைக் காட்டி பெண்ணியத்தைப் போற்றியுள்ளதை இதன் மூலம் நாம் அறியமுடிகிறது (Chithalai Saathanar, 1949).

## அருள் பண்பு இல்லாதவன் செய்த அறத்தின் நிலை

செல்வம் இல்லாதவருடைய குலப்பெருமையும், பொறுமை இல்லாதவன் மேற்கொண்ட தவமும், நெஞ்சில் அருள் பண்பு இல்லாதவன் செய்த அறமும் இருளில் கண்ணில் இடப்பட்ட மை போன்றதாகும். இவையெல்லாம் நீங்கப் பெற்று செய்கின்ற அறம் மேலான அறமாக விளங்குவதை,

**“பொருளில் சிலரும் பொறாமையில் நோன்பும்**
**அருளிலறது மன மச்சி லரசு**
**மிருளினு ளிட்ட விருண்மையாது வென்றே**
**மருளில் புலவர் மனங் கொண்டுரைப்ப”** (வளையாபதி:பா:19)

ஆடு, மாடு, மற்றும் கோழியைக் கொன்று அகிம்சையைப் போதிப்பது பயனற்றது என்று பெண் வழிக் கூறி அறத்தை அனைவரும் பின்பற்றக் கூடிய ஒரு தாராளப் பெண்ணிய நோக்கத்தைக் கூறியிருப்பதை நாம் அறிய முடிகிறது (Rajendran, 2007).

## தவமும், துறவறமும்

தவம் என்பது இல்லறத்தார் மற்றும் துறவறத்தார் என இரண்டுவகையாகப் பிரிப்பர். ‘தவம் என்ற சொல்லுக்கு எரித்தல், துலங்குதல், தணல், மற்றும் துறவறப் பயிற்சி என்று பொருள்படுகிறது’ என்பர் அ.ந.சொக்கலிங்கம் (Chokkalingam, 1994). துறவறத்திற்குத் தவம் முக்கியமானதாகும். இத்தவத்தின் சிறப்பினை தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

**"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்"** (திருக்குறள்:பா.264)

என்று குறிப்பிடுவதை இதன் மூலம் நாம் அறியமுடிகிறது (Parimelazhagar, 2014).

## வளையாபதியும் தவத்தின்சிறப்பும்

அறநெறியில் பொருள் ஈட்டுதல், பெண்களோடு புணர்தல் இன்பம், தவ ஒழுக்கத்திற்கு இடையூறு அல்ல் பொருள்கள் மேல் பற்றில்லாதவன், காமஇன்பத்திற்கு அடிமையாகாமல் இருத்தல், உயிர்களுக்கத் தீங்கு செய்யாதவர்கள் போன்றவர்கள் செய்கின்ற தவமானது மெய்யான தவமாகும் எனக் கூறுகின்றது. இப்பண்புகளைச் சிறப்பான முறையில் செய்கின்றவர்களின் இல்வாழ்க்கையானது மென்மேலும் சிறக்கும். மேலும் இவர்கள் வீடு பேற்றினை அடைய இது உறுதுணையாக இருக்கும் என்பதனை வளையாபதி,

**"பொருளோடு போகம் புணர்ந்த துரினும்**
**அறுதல் சான்ற விருந்தவஞ் செய்ய மின்**
**இருளில் கதிச் சென்றினி யாவன் வாரீர்**
**தெருள துளிறுந் தெகுண மினதுவே"** (வளையாபதி:பா.15.)

என்று குறிப்பிடுகின்றாள். தவத்தின் சிறப்பால் இல்வாழ்வு சிறக்கும் என்று ஒரு பெண் கூற்றின் வாயிலாகப் பெண்ணியத்தைப் போற்றியுள்ள விதம் ஆசிரியரைப் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளதை நாம் அறியமுடிகிறது (Rajendran, 2007).

## கண்ணகியும் விருந்தோம்பல்க்கனவும்

கண்ணகி இறுதிவரை தன் கணவன் கோவலன் தனக்குத் தீங்கு விளைவித்ததாகக் கருதவில்லை. தான் அதனால் துன்புற்றதாகவும் கூறவில்லை. இல்லறத்தில் நல்லறமாகக் கருதப்படும் விருந்தோம்பலைத் தன் கணவன் கோவலனுடன் இருந்து செய்ய முடியவில்லையே என்று கண்ணகி வருந்தியதை,

**"அறவோர்க்கு அளித்தலு மந்தண ரோம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னைநும்"** (சிலப்பதிகாரம், 16:71-73)

எனும் அடிகள் மூலம் உணரமுடிகிறது. விருந்தோம்பல் பண்பினைக் கண்ணகியைப் போல பிற பெண்களும் பின்பற்ற வேண்டும் என சமதர்மப் பெண்ணிய நோக்கை ஆசிரியர் நமக்கு வலியுறுத்துவதை நாம் இதன் மூலம் அறியமுடிகிறது (Jawarlal, 2010).

## மணிமேகலையும் சமதர்மப் பெண்ணியக் கோட்பாடும்

காந்தி நகரம் பஞ்சத்தில் மக்கள் பட்டினியாக இருந்து உயிர் இழந்தார்கள். அப்போது மணிமேகலை அந்த நகருக்குச் சென்று தன் கையில் உள்ள அமுதசுரபி பாத்திரத்தின் மூலம் அனைவருக்கும் உணவு அளித்து உயிர் கொடுத்ததை,

**"அங்கையின் ஏந்திய அமுத சுரபியை**

**வைத்து நின்று எல்லா உயிரும் வருக**
**பைத்து அரவு அல்குல் பாவைதன் கிளவியின்**
**மெய்த்தவ மூவ வறுபாடை மக்களில்**
**கானார், கேளார், கால்முடப்பட்டோர்**
**பேணா மாக்கள், பேசார் பணிந்தோர்**
**படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்**
**------------ ---------- ---------- --------------**
**------------ ---------- ---------- --------------**
**------------ ---------- ---------- --------------**
**------------ ---------- ---------- --------------**
**வசித் தொழில் உதவி வளம் தந்தது எனப்**
**பசிப்பிணி தீர்த்த பானவியை ஏந்திச் செல்லும்”** (மணிமேகலை:28:218-235)

என்ற பாடலடிகள் கூறுகின்றன. அமுத சுரபியை உள்ளங்கையிலே ஏந்தி எல்லாவுயிர்களும் உணவு உண்ண வருக என்று அழைப்பாள் (Chithalai Saathanar, 1949). மேலும் அவள் பதினெட்டு மொழி பேசக் கூடியவள் யார் யார்ருக்கு உணவுவளிக்கலாம் என பட்டியலிடுகிறாள், காது கேட்காதவர்கள் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்கள், வாய்பேசாதவர்கள், நோயினால் வாடுகின்றவர்கள், தவக்கோலம் உடையவர்கள், பசி நோயினால் வருந்தியவர்கள், வறுமையுடையோர்கள் போன்றவர்களுக்கு உணவளித்து உயிர் கொடுத்தாள். மேலும் உணவு கொடுப்பதில் நாடு, மொழி, சமயம், இன வேறுபாடு பார்த்தல் கூடாது என்ற சமதர்மப் பெண்ணியக் கோட்பாடு இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளதை நாம் இதன் மூலம் அறியமுடிகிறது.

## மிதவாதப் பெண்ணிய நிலை

கோவலன், கண்ணகியைக் காட்டிலும், மேட்டிலும் நடக்கும்படி செய்து அவளுக்கு வாழ்க்கையிலும் இன்பம் தராமல் இருந்து விட்டோம் என்ற குற்றவுணர்வு கோவலனிடம் இருந்தது. கண்ணகி அக்குற்றங்களை மறந்து கணவனுக்குப் பணிவிடை செய்வதைத் தன் கடமையாகக் கொண்டாள் என்னும் கூற்றை,

**“உலக புகழும் ஒழுக்கம் துறந்தீர்கள் யான்**
**அவ்வாழ்வைக் குறித்து நொந்தேன்-ஆனால்**
**யான் தங்கள் குறிப்பு எதுவாயினும் அதன் வழி**
**ஒழுகும் குறிக்கோளுடையவள்”** (சிலப்பதிகாரம்:16:104-107)

என்று ஆசிரியர் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். கண்ணகி தன் கணவனிடம் நீங்கள் எங்கு அழைத்தாலும் வருவேன் என்றும் துன்பத்தைப்பற்றி தனக்குக் கவலையில்லை என்றும் கூறினாள் (Jawarlal, 2010). மேலும் இதன் வாயிலாகக் கணவன் சொற்படி மனைவி கேட்டு நடக்க வேண்டும் என்னும் அறத்தை ஆசிரியர் இங்கு உணர்த்துகிறார். இத்தகைய செயல்பாடுகளால் மிதவாதப் பெண்ணிய நிலையினை வலியுறுத்தி ஆசிரியர் கண்ணகி மூலம் கூறியுள்ளதை இங்கு நாம் அறியமுடிகிறது.

## முடிவுரை

இவ்வாறு அறம் குறித்த விளக்கங்கள், இலக்கியங்களில் அறம் குறித்த சிந்தனைகள், வறுமையில் வாடும் மக்களின் பசியின் துயரை மணிமேகலை அமுதசுரபி மூலம் நீக்கி அந்த நெறியில் மேன்மை பெற்று விளங்கும் தன்மையும், அறவழிப்படாத மன்னன் ஆட்சி அடியோடு அழியும் என்பதையும், உலகெங்கும் அறநெறிகளை உள்ளார்ந்த அன்பு வெளிப்பாட்டுடன் அறநெறிகளைப்பரப்புதல் வேண்டும் என்னும் கோட்பாடுடையவளாக வளையாபதியின் பாத்திரமும், துறவு நெறி வாழ்வின் அறநெறியாகவும், வாழ்வின் உயர்ந்த அறமாக விருந்தோம்பலும், கண்ணகி கணவன் கோவலன் இல்லாத நிலையில் விருந்தோம்பலைச் சிறப்புற செய்ய முடியவில்லையே என வருந்தும் கண்ணகியின் நிலையும், இதன் மூலம் பெண்கள் அறக்கோட்பாடுகளில் சிறந்தவர்களாக காப்பியக் காலகட்டங்களில் திகழ்ந்துள்ளனர் என்பதும், பெண்ணியத்தை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற நிலையையும் இக்கட்டுரை மூலம் நாம் அறியலாகும் செய்தியாகும்.

## References


Aiyar, V.V.S., (1916). The Kural or The Maxims of Tiruvalluvar (1 ed.). Chennai: Amudha Nilayam. India.

Sivagamasundari, S., (1972), Vallalar, Second Edition, Mercury Book Company, Coimbatore, India.

Kathiraver Pillai N., (2014), Thamizh Mozhi Agaradhi, Saratha Pathippagam, Namakkal – 637001, Tamil Nadu, India.

Ilampuranar, (1982), Tholkapiyam Porulathikaram, The South India Saiva Siddhanta Works Publishing Sty Ltd, Chennai, India.

Chithalai Saathanar, (1949), Manimegalai, Fourth Edition, Venus Printing Press, Chennai, India.

Rajendran, P., (2007), Valayapathi and Kundalakesi - Source and text, Gangai Book House, Chennai, India.

Chokkalingam, A.P., (1994) Principles of life explained by Kural, The South India Saiva Siddhanta Works Publishing Sty Ltd, Chennai, India.

Parimelazhagar, (2014) Thirukkural, Saradha Pathippagam, Chennai. India.

Jawarlal, K.G., (2010) Silappathikaram, Kizhakku Pathippagam, Chennai. India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


## About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License